# கிருபை மலர்

மலர் - 10
ஆகஸ்ட் - 2019
இதழ் - 6

தனிப்பிரதி ரூ. 10/-
ஆண்டு சந்தா ரூ. 100/-



# உங்கள் சகோதரியிடமிருந்து ....

## என் அன்பு கிருபை குடும்பத்தினரே!



இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் வாழ்த்துகிறேன். கிருபை மலர் பத்திரிக்கை கிடைக்கும் இந்நேரம் குற்றாலத்தில் ஊழியங்களை நிறைவேற்றி கொண்டிருப்பேன். **திருநெல்வேலி திருமண்டல வாலிப பெண்கள் கூடுகை குற்றாலத்தில்** வைத்து நடைபெறுகிறது. தேவனுக்கே மகிமை! ஆகஸ்ட் மாத ஊழியங்களுக்காய் ஜெபித்து கொள்ளுங்கள்.

பல புதிய ஆவிக்குரிய புத்தகங்களை தொடர்ந்து எழுத ஆவியானவர் உதவி செய்கிறார். ஒரு புத்தகம் வெளியிட குறைந்தது Rs. 20.000 தேவைப்படுகிறது. உங்கள் குடும்பத்தின் சார்பில் ஒரு புத்தகத்தை நீங்கள் வெளியிடலாம். அதே போல் ஒரு மாத கிருபை மலர் வெளியிட விரும்புவீர்கள் என்றால் உங்கள் சார்பில் Rs.17.000 அனுப்பி ஊழியத்தை தாங்கலாம். அது மட்டுமல்ல ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்கள் மற்றும் சிறை நண்பர்களின் குடும்பங்களை போஷிக்க விரும்பினால் மாதம் Rs. 2.000 அனுப்பி தாங்கலாம்.

கிருபை மலர் பத்திரிக்கை உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும் என்றால் உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். அவர்கள் விலாசங்களை எங்களுக்கு அனுப்பினால் நாங்கள் அவர்களுக்கு கிருபை மலர் அனுப்ப உதவியாய் இருக்கும். கிருபை அலுவலகத்தில் பணியாற்றும் ஒவ்வொருவருக்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.

கர்த்தர் தந்த தரிசனத்தில் தொடர்ந்து ஓட தேவையான தேவ பெலனுக்காக, தேவ கிருபைக்காக, அபிஷேகத்திற்காக ஜெபியுங்கள். நமது ஊழியங்களை குறித்த செய்திகளை, **website, youtube** மற்றும் **facebook** ல் நீங்கள் பார்க்க முடியும். ஒவ்வொரு நாள் காலையிலும் 6.00 மணிக்கு 5 நிமிடம் கிருபை ஊழியத்திற்காக ஜெபியுங்கள். அதேபோல் இரவு 10.00 முதல் 10.05 வரை 5 நிமிடம் ஜெபியுங்கள். நாம் ஒருமித்து தேவ நாமத்தை உயர்த்துவோம். ஜெபம் என்ற தலைப்பில் இம்மாத கிருபை மலர் வெளிவந்து உள்ளது.

**"இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்." கொலோ 4:2.**

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக..

கிறிஸ்துவின் பணியில் அன்பு சகோதரி.
சகோதரி. **ஷீலா விஜயகுமார்**



# ஜெபம் – ஜீவியத்தின் சட்டம்

சகோ. ஷீலா விஜயகுமார்

**ஜெபமே ஜீவன்**

**ஜெபம் ஜெயம்**

**ஜீவியத்திற்கு இதுவே சட்டம்**

ஜெபம் இல்லாத வீடு கூரையில்லாத வீடு என்று கூறுவார்கள். ஜெபிக்கும் குடும்பம் தான் நிலைக்கும். ஒன்று கூடி ஜெபிக்கும் குடும்பம் ஒன்றுபட்டு வாழும். ஆண்டவர் குடும்பத்தின் அஸ்திபாரமாகி ஒவ்வொருவரையும் தனித்தனியே ஆண்டு குடும்பத்தைக் கட்டுகிறார்.

வெஸ்லி எல் டியூவெல் என்பவர் ஜெபிக்க மறப்பவன் முட்டாள் என்று கூறுகிறார். ஜெபத்தைக் கேட்கிறவர் ஆண்டவர். தினமும் குறைந்தபட்சம் ஒரு மணி நேரமாவது ஜெபத்தில் செலவு செய்யப்பழகினால் ஆயிரமடங்கு ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளலாம். ஜெபத்தில் செலவு செய்யப்படும் நேரம் ஒரு நாளும் இழப்பைக் கொண்டு வராது.

உம்மோடு செலவிடும்
ஒவ்வொரு நிமிடமும்

வீணாகப் போகாதையா

என்னைப் பெலவானாய்

மாற்றுதய்யா என்று பக்தன் பாடுகிறார்.

## 1. ஏன் ஜெபிக்க வேண்டும்

ஜெபம் என்பது உணர்வு சார்ந்த விஷயம். கடமைக்காக செய்யப்படக் கூடாது. ஒரு மனிதன் புதிதாக பட்டணத்திற்குள் பிரவேசிக்க நேரிட்டது. பல மாடி கட்டிடம் ஒன்று கட்டப்பட்டுக் கொண்டிருந்ததைக் கண்டார். 20 மாடிக்கு மேல் உள்ள கட்டிடத்தை ஆசை ஆசையாய் சுற்றிப் பார்க்கச் சென்றார். மேலே போய் நின்று பட்டண முழுவதையும் ரசித்து ரசித்துப் பார்த்து சொக்கிப் போனார் திடீரென நேரம் அதிகமாகி விட்டதை உணர்ந்த அவர் சரசரவென படிகளில் இறங்கினார்.

கீழ்தளம் வந்தபோது கதவு பூட்டியிருக்கக் கண்டார். சுற்றும் முற்றும் ஓடி வெளியே வர வாய்ப்பில்லாதிருந்தது. மறுபடியும் மேலே ஏறினார். மேல் மாடியில் திறந்த வெளியில் நின்று **'உதவி' 'உதவி'** என சத்தம் போட்டு பார்த்தும் பிரயோஜனம் இல்லாதிருந்தது. கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தான். தன் சட்டைப் பையில் கைவிட்டு அதில் இருந்த ரூபாய் நோட்டுக்களை ஒவ்வொன்றாய் கீழே வீசினார்.

ரூபாய் நோட்டை எடுப்போர் மேலே பார்க்க நேரிடும். அவர்கள் மூலம் தனக்கு உதவி கிடைக்கும் என நினைத்தார். ரூபாய் நோட்டை எடுத்தவர்களோ தங்களுக்கு பொக்கிஷம் கிடைத்தது என்று நினைத்து அக்கம் பக்கம் யாராவது பார்க்கிறார்களா என்று மட்டும் பார்த்து விட்டு பணத்தை எடுத்து விட்டுப் போயினர். கடைசியில் அவரிடம்

மிஞ்சியதோ சில சில்லரைக் காசுகள். சில்லரைக் காசுகளை வீசியும் பயனில்லை. கோபமடைந்த இந்த நபரோ அங்கிருந்த சிறு கற்களை பொறுக்கி கீழே வீசினார். ஒரு சிறு கல் ஒரு மனிதனின் தலையைப் பதம் பார்க்க அந்த மனிதர் தன்னையுமறி யாமல் மேல் நோக்கிப் பார்த்தார். கல்லை வீசியவர் அங்கிருந்து செய்கையில் ஏதோ பேசி கீழிருந்தவர்களுக்கு தனக்கு உதவி தேவை என்பதை புரிய வைத்தார். உதவியும் கிடைத்தது.

இதிலிருந்து ஒரு நீதியைக் கற்றுக் கொள்ள முடியும். மேலேயிருந்து பணமும், காசும் கிடைக்கும்வரை எந்த மனிதனும் மேலே பார்க்கவில்லை. கல் வந்தவுடன் மேலே தன்னையுமறியா மல் பார்த்தார். நன்மையை பெறும் மனிதன் கடவுளைப் பார்ப்பதில்லை. கஷ்டம் வந்து விட்டாலோ தன்னையு மறியாமல் கடவுளைத் தேடுகிறான். சந்தோஷத் தருணங்களில் எல்லாம் கடவுளைத் தேட (ஜெபிக்க) மனம் அற்றும், நேரம் அற்றும் அலைகிறான். அந்த நினைப்பே வருவதில்லை பலருக்கு. இன்னும் சிலரோ நான் கடவுளுக்குப் பிரியமானவன். ஆகவே கடவுள் என்னை ஆசீர்வதிக்கிறார் என்று தங்களையே தேற்றிக் கொள்கின்றனர்.

பிரியமானவர்களே! உங்கள் ஜெபம் எப்படி இருக்கிறது. இஸ்ரவேலர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்ட சம்பவம் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன்.

**பார்வோன் சமீபித்து வருகிறபோது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்து எகிப்தியர் தங்களுக்குப் பின்னே வருகிறதைக் கண்டு மிகவும் பயந்தார்கள். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்.** யாத் 14:10.

எகிப்தை விட்டு வெளியேறிய இஸ்ரவேலர் செல்லும் வழியில் செங்கடல் முன்னே இருந்ததைக் கண்டு கலங்கினர், திரும்பிப் பார்த்தாலோ எகிப்தியர் பின்னே துரத்தி வருகிறதைக் கண்டு மிகவும் பயந்து போயினர். இந்த சூழலில் கர்த்தரை நோக்கி ஜெபிக்கிறார்கள். ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு என்றவரே நம் தேவன். ஆனால் ஜெபம் என்பது எப்படி இருக்க வேண்டும்? ஆபத்துக்காக மட்டும் ஜெபிக்கும் ஜெபமாக இருக்கக் கூடாது. Pray, Not because of the devil is Chasing என்று சொல்ல விரும்புகிறேன். சாத்தான் துரத்துகிறான் என்று ஜெபிக்கக் கூடாது.

ஜெபம் என்பது தேவனோடு வைத்துள்ள உறவின் வெளிப் பாடாகும். Prayer is the Relationship between you and God. கிறிஸ்தவன் என்றோ; தேவை என்றோ ஜெபிப்பது ஜெபமாகாது. தேவன் மீது வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்த அவர் சமூகம் நாடி அவரோடு பேசும் அல்லது உரையாடும் அனுபவமே ஜெபமாகும். இதை பின்வருமாறு எழுத விரும்புகிறேன்.

**சாத்தான் துரத்துகிறான் என்பதற்காக ஜெபிக்காதே; தேவனோடு உள்ள உறவை பெலப்படுத்த ஜெபி.**

## 2. எப்படி ஜெபிக்க வேண்டும்

ஜெப நேரம் என்பது இன்றைக்கு பயபக்தி அற்ற நேரமாய் மாறிப்போய் விட்டது. ஜெப நேரங்கள்

ஆலயங்களில் கூட வேறு விதமாய்க் காணப்படுகிறது. கண்களைத் திறந்து கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டு ஆடையை சரி செய்து கொண்டு என பயபக்தியில்லா ஜெபநேரமாயிற்று. இந்தக் கால தலைமுறையினரோ அந்த நேரத்தில் தான் கைபேசியில் வேகவேகமாய் குறுஞ்செய்தி அனுப்பி ஆனந்தம் கொள்கின்றனர்.

தனி ஜெபமோ... கேட்கவே வேண்டாம். தூக்கக் கலக்கத்தில் கட்டிலில் சாய்ந்து அமர்ந்து கொண்டே தலையணையைக் கட்டி அணைத்துக் கொண்டு கொட்டாவி விட்டுக் கொண்டு ஜெபிப்பது ஜெபமாகுமா? வேத கதாபாத்திரங்கள் எப்படி ஜெபித்தார்கள்? பார்ப்போமா?

**“ஜனங்களெல்லாரும் தங்கள் கைகளைக் குவித்து... முகங்குப்புற விழுந்து... பணிந்து கொண்டனர்.** நெகே 8:6.

**சாஸ்திரிகள் சாஷ்டாங்கமாய் விழுந்து... பணிந்து** மத் 2:11

இயேசு கிறிஸ்து எப்படி ஜெபித்தார்?

**‘‘முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணினார்.** லூக் 22:41,42.

முழங்காற்படியிடுவது தாழ்மையின் அடையாளம். நம்மைப் படைத்த தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி ஜெபிப்பது பயபக்தியைத் தான் காட்டும். தேசியகீதம் பாடும் போது ஒழுங்குமுறை உண்டல்லவா! மீறினால் அது அவமரியாதையாம்! ஜெபமும் அப்படித்தான். இஷ்டம் போல ஜெபிக்கக் கூடாது. சர்வவல்வரோடு பேசும் நேரமல்லவா அது! ஜெபம் என்பது ஆவிக்குரிய ஒழுங்குமுறை. ஒழுங்கைக் கடைப்பிடித்து ஜெபிப்பதே நல்லது. சீராக ஜெபித்தால் ஜெபமும் வளரும்.

ஒரு மணி நேரம் ஜெபிக்க மாதிரி ஜெபம் ஒன்றை எழுதுகிறேன்.

| | | |
|---|---|---|
| **1.** | **10 நிமிடம்** | **கர்த்தரைத் துதித்து ஆராதிக்க வேண்டும். அவருடைய மகத்துவமான பெயர்களை சொல்லி கர்த்தரைப் போற்றிப் புகழ வேண்டும்.** |
| **2.** | **10 நிமிடம்** | **நன்றி செலுத்த வேண்டும். நமது வாழ்வில் கர்த்தர் செய்த நன்மைகளை மறவாமல் நினைத்து நன்றி சொல்வது நல்லது. சங் 103,145,146,147ம் சங்கீதங்களை நன்றி செலுத்தும் சங்கீதங்களாக பயன் படுத்தி நன்றி சொல்லலாம்.** |
| **3.** | **10 நிமிடம்** | **பாவ அறிக்கை, அறிந்தோ, அறியாமலோ செய்த தவறுகளை கர்த்தரிடம் அறிக்கை செய்ய வேண்டும். கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். அத்தவறை மறுபடியும் செய்யாதிருக்க தேவ பெலனை கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். நம்மை சரி செய்து கொள்வது நல்லது.** |
| **4.** | **20 நிமிடம்** | **மற்றவர்களுக்காக மன்றாடி ஜெபிக்க வேண்டும். ஜெபக்குறிப்புகளை ஒரு** |

**குறிப்பேட்டில் எழுதி வைத்துக் கொண்டு யாவருக்காகவும் ஜெபிக்க வேண்டும்.**

**5. 5 நிமிடம்** **கடைசியாக நம் குடும்பத்தின் தேவைகளை, எதிர் பார்ப்புகளை ஆண்டவரிடம் சொல்ல வேண்டும்.**

**6. 5 நிமிடம்** **கர்த்தரின் குரலைக் கேட்க அமைதியாக 5 நிமிடம் காத்திருக்க வேண்டும். மனதை ஒருமுகப்படுத்தி அவர் பிரசன்னத்தை அமைதியாய் அனுபவித்துப் பழகுங்கள்.**

இதன் பின் வேதத்தைத் திறந்து குறைந்தது 2 அல்லது மூன்று அதிகாரங்களை வாசிப்பது நல்லது. அவரைத் தேடும் அத்தனை பேரும் அவரைக் கண்டடைகிறார்கள். அவரை நோக்கிப் பார்த்த முகங்கள் பிரகாசிக்கும் என்று சங் 34:5ல்வாசிக்கிறோம்.

## 3. எப்பொழுது ஜெபிக்க வேண்டும்?

**அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்.** நீதி 8:17.

அதிகாலை நேரமே சிறந்தது. மோசேயிடம் தேவனாகிய கர்த்தர் பேசிய போதெல்லாம் நான் கூர்ந்து கவனித்த ஒரு காரியத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

**''விடியற்காலத்தில் நீ ஆயத்தமாகி, சீனாய் மலையில் ஏறி, இங்கே மலையின் உச்சியில் காலமே என் சமூகத்தில் வந்து நில்''** யாத் 34:2.

இந்த வசனத்தை ஐந்து அல்லது ஆறு தடவை வார்த்தை வார்த்தையாய் நிறுத்தி வாசியுங்கள்.

1. **விடியற்காலத்தில்**
2. **ஆயத்தமாகி**
3. **மலையில் ஏறி**
4. **மலையின் உச்சியில்**

உங்கள் வேதத்திலும் இந்த வார்த்தைகளை அடிக்கோடிடுங்கள். காலையில் அல்ல; விடியற்காலையில் வரச்சொல்கிறார். அதுவும் ஆயத்தமாகி வரவேண்டுமாம். சமவெளியில் இருக்கிற இடத்திற்கல்ல ; விடியற்காலத்தில் மலையில் ஏறி அதன் உச்சியில் வந்து நில் என்கிறார். மோசே எவ்வளவு பயபக்தியுடன் சென்றிருப்பார். ஒரு நிமிடம் சிந்தியுங்கள். அதிகாலையில் இருட்டோடு எழுந்து ஜெபிக்க, மோசேயின் அனுபவம் உற்சாகப்படுத்துகிறது என நம்பி கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்.

ஜெபத்திற்கென்று குறித்த நேரத்தில் தவறாது ஜெபிப்பது நல்லது. ஒரு போதும் ஜெப நேரத்தை மாற்றக் கூடாது. அமெரிக்க ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கனைக் காணும்படி ராணுவ தளபதிகள் மிக அதிகாலையில் ஐந்து மணிக்கே வந்திருந்தனர். ஆனால் ஜனாதிபதி உள்ளே யாருடனோ பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டனர். உள்ளே சென்று பார்த்த போது ஒருவரும் இல்லை. லிங்கனிடமே சந்தேகத்தைக் கேட்டனர். அவரோ அது என் ஜெப நேரம். நான் தேவனோடு பேசும் நேரம் அது" என்றார்.

யோபு என்ற பக்தன் அதிகாலையில் பலி செலுத்தினாராம். ஒரு பணக்கார எஜமாட்டி

விடியற்காலையில் சேவல் கூவியவுடனே எழுந்து கொள்வார்களாம். தன் வேலைக்காரிகளை எல்லாம் உடனே அதிகாலைப் பொழுதிலேயே எழுப்பி விட்டு அவரவர் வேலையைப் பார்க்கச் சொல்வது அவர்கள் வழக்கம்.

அதிகாலையில் இவ்வாறு தூக்கத்தைக் கலைப்பது வேலைக்காரிகளுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் கோபம் எல்லாம் சேவலின் மேல் திரும்ப யாருக்கும் தெரியாமல் சேவலைக் கொன்று விட்டார்கள்.

சேவல் மரித்தபின் அந்த எஜமாட்டிக்கு விடிந்ததும், விடியாததும் தெரியவில்லை. இதனால் நடுராத்திரியிலே எழுந்து வேலைக்காரிகளை எழுப்பி வேலைகளைப் பார்க்கச் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

விடியற்காலையில் தூங்க விரும்பின வேலைக்காரிகளுக்கு இதனால் இரவுத் தூக்கமும் இல்லாமற் போயிற்று. இந்த சம்பவத்தின் மூலம் என்ன தெரிந்து கொண்டீர்கள்? அதிகாலையில் எழுந்து ஜெபிக்க சோம்பல்பட்டால் உலகப் பிரச்சனைகள், வேதனைகள் நடு இரவில் எழுப்பி உட்காரவைக்குமாம்.

பகலின் குளிர்ச்சியான வேளையில் ஏதேனில் உலாவிய ஆண்டவர் ஆதாம் ஏவாளுடன் உறவாடின தேவன் உங்களோடும் பகலின் குளிர்ச்சியான வேலையில் உலாவவும், உறவாடவும் தம் கிருபைகளுடன் காத்து நிற்கிறார்.

இஸ்ரவேலருக்கு விடியற்காலையில் மன்னாவைத் தந்த ஆண்டவர். **“வெயில் ஏற ஏற உருகிப்போம்.”** யாத் 16:21 என்று வாசிக்கிறோம். விடியற்காலந்தோறும் மன்னாவை இஸ்ரவேலர் சேர்ப்பார்கள். வெயில் ஏறிய பின் சேர்க்க முற்படுவோரால் அதை சேகரிக்க முடியாதபடி உருகிப் போனது. விடியற்காலையில் கர்த்தரைத் தேடினால் கர்த்தரின் வார்த்தை என்னும் மன்னாவை பெற்றுக் கொள்ள முடியும். வெயில் வந்த பின் தேடுவோரால் வார்த்தையின் வல்லமையை உணர முடியாது. எத்தனை உண்மை!

அதிகாலைப் பொழுதைக் கர்த்தர் சமூகத்தில் செலவு பண்ணப் பழகினால் அந்நாளில் வெற்றியையும் சந்தோஷ சமாதானத்தையும், திருப்தியையும் நிறைவாய் அனுபவிப்பது உறுதி. குறுகிய நேரத்தில் திட்டமிட்ட வேலைகளை செய்து முடிக்க தேவன் கிருபை செய்கிறதை அனுபவிக்க முடியும்.

**ஜெபிப்போரைக் கர்த்தர் கைவிடுகிறதில்லை.** சங் 27:10.

**ஜெபிப்போரின் முகம் வெட்கமடையாது.** சங் 34:5.

**ஜெபிப்போருக்கு தேவன் செவி கொடுக்கிறார்.** சங் 34:4.

**ஜெபிப்போர் தேவ மகிமை அனுபவிப்பர்.** சங் 63:2.

**ஜெபிப்போரின் காரியம் வாய்க்கும்.** IIநாளா 26:5

**ஜெபிப்போருக்கு குறைவில்லை.** சங் 34:10.

**ஜெபமே ஜீவன்: ஜெபம் ஜெயம்:**

**ஜீவியத்திற்கு இதுவே சட்டம்!**

**ஆமென்!! அல்லேலூயா !!**

# ஆசரிப்புக் கூடார ஜெபம்

## முதல் வார தியானம்

நிறைய நேரம் ஜெபிக்க வேண்டுமென்று நினைக்கிறேன். ஆனால் என்னால் ஜெபிக்க முடியவில்லை. இந்த நிலையில் இருப்பவர்கள் இந்த ஆசரிப்புக்கூடார ஜெபத்தை செய்யும் போது ஜெப வாழ்க்கையில் ஒரு மாற்றத்தைக் காண முடியும். ஆசரிப்புக் கூடார ஜெபமானது தேவனோடு உறவாட, அவர் குரலைக் கேட்க, தேவசித்தத்தை அறிந்து கொள்ள ஒரு அற்புதமான வழியாகும்.

நாம் ஜெபிக்க ஆண்டவரின் சமூகத்தில் வந்தவுடன் நன்றிகளை சொல்ல வேண்டும். ஒவ்வொரு முறை நன்றி சொல்லும் போதும் பிதாவே, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை எடுத்துக் கொண்டு உம்மைத் தொழுது கொள்ளுகிறேன் என்று சொல்லி பிறகு நன்றி சொல்ல வேண்டும். உதாரணமாக, பிதாவே இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தை எடுத்துக் கொண்டு உம்மைத் தொழுது கொள்ளுகிறேன். என் பாவங்களைக் கழுவி சுத்திகரித்ததற்காக நன்றி.

இப்படி இன்னும் எவ்வளவு காரியங்களுக்காக நன்றி சொல்ல முடியுமோ அவ்வளவு சொல்லலாம். ஏனெனில் ஆசாரியர்கள் வாசஸ்தலத்திலிருந்து ஆசரிப்புக் கூடாரத்தில் நுழையும் முன் கைகளில், காதுகளில் இரத்தத்தைப் பூசிக் கொண்டு செல்வார்கள். ஆசரிப்புக்கூடார வாசலில் பலிபீடம் இருக்கும். அதில் பலி செலுத்தி இரத்தம் சிந்தப்படுவது போல நமக்காக அடிக்கப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தால் நாம் கழுவப்பட வேண்டும்.

உதாரணமாக, பிதாவே இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை எடுத்துக் கொண்டு உம்மைத் தொழுது கொள்ளுகிறேன். என் சிந்தனைகளை இயேசுவின் இரத்தத்தால் கழுவுங்கள் என்று கேட்க வேண்டும். இப்படி ஒவ்வொரு உறுப்புக்களையும் ஒப்புக் கொடுக்க வேண்டும். உண்மையாக இயேசுவின் இரத்தம் நம்மைக் கழுவும் என்ற உணர்வுடன் ஜெபிக்க வேண்டும். நம் பாவங்கள் கழுவப்பட்டவுடன் ஆவியானவர் நம்மை நிரப்புவதை உணர முடியும். அவரது பிரசன்னம் நம்மை மூடும்.

ஆசரிப்புக் கூடாரத்தின் அடுத்த பகுதியாக பரிசுத்த ஸ்தலம் அமைந்துள்ளது. பரிசுத்த ஸ்தலத்தில் சமூகத்தப்ப மேஜை, குத்துவிளக்கு, தூபபீடம் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த குத்துவிளக்கு எப்போதும் எரிந்து கொண்டே இருக்கும். அதுபோல நமக்குள் ஆவியானவரின் அபிஷேகம் எரியும். அதுவரை நமது தாய்மொழியில் ஜெபிக்க வேண்டும். அதன்பிறகு அந்நிய பாஷையில்

ஆவியானவர் எவ்வளவு நேரம் நடத்துகிறாரோ அவ்வளவு நேரம் ஜெபிக்க வேண்டும். அதன்பின் சமூகத்தப்ப மேஜையின் அப்பங்கள் இருக்கும். ஒவ்வொரு நாளும் இந்த அப்பங்கள் புதிதாக வைக்கப்படும்.

அதுபோல நாமும் தினமும் வேத வசனங்களை சொல்லி ஜெபிக்க வேண்டும். விசேஷமாக வேதபுத்தகத்தை புகழும் வசனங்கள் மற்றும் ஆண்டவரின் வாக்குத் தத்தங்களான வசனங்களைச் சொல்லி ஜெபிக்க வேண்டும். மனப்பாடமாக வசனங்களைச் சொல்லத் தெரியாவிட்டால் ஒரு பேப்பரில் எல்லாவற்றையும் எழுதி வைத்து ஜெபியுங்கள்.

அடுத்ததாக தூபபீடம் இருக்கிறது. தூபமாய் நமது ஸ்தோத்திரங்களை புகழ்ச்சியை ஆண்டவருக்குச் செலுத்த வேண்டும். அதாவது ஆண்டவரைப் புகழ்ந்து சில பாடல்களைப் பாட வேண்டும். பாடிக் கொண்டிருக்கும் போதே அந்த பாடல் அந்நிய பாஷையில் மாறிவிடும். அந்நிய பாஷையில் பாடும் போது நமது பாடலில் மாற்றம் ஏற்படும். அந்த நேரங்களில் நம்மை விட்டுக் கொடுத்தால் கர்த்தரின் குரலைக் கேட்க முடியும். அல்லது ஆவிக்குரிய அனுபவங்கள் வித்தியாசமான முறையில் பெற்றுக் கொள்ள முடியும்.

மகாபரிசுத்த ஸ்தலம் என்பது ஆசரிப்புக்கூடாரத்தின் அடுத்த பிரதான பகுதி. அங்கு ஷெக்கினா மகிமை பிரசன்னம் இருக்கும். தேவன் பேசுகிறதை அங்கே கேட்க முடியும். ஆவிக்குரிய அனுபவத்தை பெற்று தேவகுரலைக் கேட்கும் அனுபவம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கும் அனுபவமாகும்.

வருடத்திற்கொருமுறை பிரதான ஆசாரியன் மட்டும் சென்று தேவகுரலைக் கேட்டு தேவ பிரசன்னத்தை அனுபவிப்பார். இந்நிலை மாறி இந்த ஆசீர்வாதத்தை மனுக்குலம் எல்லாம் பெற்று அனுபவிக்க கர்த்தராகிய தேவன் தன் சரீரத்தை, ஜீவனைத் தந்து நமக்குப் பெற்றுத் தந்ததால் ஆசரிப்புக் கூடார மாதிரி ஜெபத்தைப் பின்பற்றும் அத்தனைபேரும் தேவ குரலைக் கேட்டு மகிழும் பாக்கியத்தை அனுபவிக்கலாம். கிறிஸ்துவுக்கே மகிமை உண்டாகட்டும்.

## ஜெபக்குறிப்புகள்

கிறிஸ்து இயேசுவின் கிருபை ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்

1. 'கிருபை மலர்' ஆசீர்வாதத்திற்காக
2. புதிய ஆவிக்குரிய வெளியீடுகளுக்காக
3. ஊழியத்தில் நிலவும் பொருளாதார நெருக்கமான சூழல் மாற, தேவைகள் சந்திக்கப்பட
4. அலுவலகத்தில் பணியாற்றும் உடன் ஊழியருக்காக
5. சகோதரியின் சரீர ஆரோக்கியத்திற்காக

மாதிரி ஜெபம்

# வேத கதா பாத்திரங்களின் அனுபவம்

## இரண்டாம் வார தியானம்

ஜெபம் என்பது இனிமையான வார்த்தை!! ஆழமான வார்த்தை!! ஆசீர்வாதமான வார்த்தையும் கூட.

ஜெபமே ஜீவன்
ஜெபமே ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்

ஜெபம் – ஜீவன்; ஜெயம் : ஜீவிய சட்டம். ஜெபத்தைக் கேட்கிறவர் கர்த்தர். ஜெபத்தின் முன்னோடியும் அவரே!

**ஆபிரகாம்** தானறியாத ஓரிடத்திற்குப் போகும்படி ஆபிரகாமைத் தேவன் அழைத்தார். தன் குடும்பத்தோடும், வேலைக்காரர்களோடும் புறப்பட்டார். எந்த இடத்தில் இராத்தங்கினாலும் அங்கெல்லாம் பலிபீடம் கட்டி தேவனாகிய கர்த்தரைத் தொழுது கொண்டவர். லோத்துக்காக மன்றாடினவர் ஆபிரகாம். அபிமெலேக்கு வீட்டாருக்காக மன்றாடினவர் இந்த ஆபிரகாம்.

**மோசே** கர்த்தரை முகமுகமாய் தரிசித்த மோசே அவர் பிரசன்னத்திலேயே வாழ்ந்தவர் எனலாம். தேவனோடு நெருங்கி வாழ வாழ ஜெபமும் அதிகம் தேவைப்படும். மோசே இஸ்ரவேலருக்காய் தேவ சமூகத்தில் மன்றாடிய மன்றாட்டு ஜெபவீரர். மோசேயின் ஜெபம் என்ன என்பதை 90ம்சங்கீதம் விளக்குகிறது.

**எலியா** பாடுள்ள மனுஷனா யிருந்தும் ஊக்கமாய் ஜெபித்தவர் எலியா. மழையை நிறுத்தியவர். மழையைப் பெய்யச் செய்தவர். அக்கினியை இறக்கியவர். மாபெரும் ஜெப வீரர். முழங்காலில் சாதித்துக் காட்டிய வீரர். கருத்தாய் ஜெபிக்கிறவர் என்று வேதம் இவரைக் குறித்து சாட்சி சொல்கிறது.

**தானியேல்** அயல் நாட்டில் நாடு கடத்தப்பட்ட நிலையில் தேவனை மறவாதவர் இவர். ஜெபம் மறவாத ஜெபவீரர். கழுத்துக்கு கத்தி வந்த போதும் ஜெபத்தை மறவாதவர் தனக்கெதிராய் சட்டம் இயற்றப்பட்ட போதும் தன்னைக் குற்றப்படுத்த ஓர் கூட்டம் உருவான போதும் ஜெபத்தை நிறுத்தாதவர். சிங்கக்கெபியிலும் ஜெபத்தைத் தொடர்ந்தவர். தானியேல் தன் மக்களின் பாவங்களைக் குறித்து துக்கித்து, மனங்கசந்து இரட்டுடுத்தி சாம்பலிலிருந்து தேவனை நோக்கி மன்றாடியவர்.

**எஸ்றா** ஜெபத்தினால் காரியத்தை சாதித்தவர் எஸ்றா. பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து எருசலேமிற்கு அவர் புறப்பட்டு வரும் போது அரசனின் பாதுகாவலை அவர் எதிர்பார்க்காமல் கர்த்தரின் கிருபையையே எண்ணி ஜெபித்துப் பெற்றுக் கொண்டவர். தேவனிடத்தில்

தேடி பெற்றுக் கொண்டேன் என்று எஸ்றா 8:23ல் அறிக்கை செய்தவர்.

**எப்பாப்பிரா** கர்த்தரின் தாசனாகிய எப்பாப்பிரா தன் மூலம் ஆதாயப்படுத்தப்பட்ட ஆத்துமாக்களுக்காகப் போராடி ஜெபிக்கிறவராகக் காணப்பட்டார். கர்த்தருடைய ஊழியத்தினிமித்தம் சிறையிலே தள்ளப்பட்ட எப்பாப்பிரா தன் விசுவாச ஜனங்களுக்காக ஜெபிக்க மறக்கவில்லை.

* சகோ. குருசிங் என்ற சுவிசேஷகர் ''ஜெபவாழ்வு சம்பவங்கள்; அருள் செய்திகள்" என்ற தலைப்பில் புத்தகம் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார்கள். அதில் சில ஜெப வீரர்களின் பொன்மொழிகள் குறிப்பிடப் பட்டிருந்தன. அதை இங்கே எழுதுகிறேன்

* நமது காலத்தில் தலைசிறந்த காலத்தையே ஜெபத்திற்குக் கொடுக்க வேண்டும். E.M. Bounds

* கிருபாசனத்தில் போய் முட்டி மோதுங்கள். நான் மிகுந்த வேதனையை அனுபவித்த நேரம் பிறரது ரட்சிப்பிற்காக கெஞ்சி மன்றாடிய வேளையே E.John Wesley

* பல்லாயிரக்கணக்கானோர் கிறிஸ்துவை நோக்கி அசையும் அளவிற்கு நான் ஆழமாய் தேவனால் அசைக்கப் பட்டிருந்தேன். முழு நாட்கள், முழு இரவுகள் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்திருக்கிறேன். Dr. Martin

* நமது இயலாமையை ஒப்புக் கொள்வதே ஜெபம். போதுமென்றிருக்கிறவன் ஜெபிப்பதில்லை. Raven Hill

தினமும் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் தனியாக ஜெபிப்பதிலும் தேவனிடம் உரையாடுவதிலும் செலவிடுங்கள். Dr. Judson.

தேவனுக்கே மகிமை!

உண்டாவதாக!

## ஜெபக்குறிப்புகள்

**திருச்சபைக்காய் ஜெபிப்போம்**

1. உங்கள் ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர் & பிள்ளைகளுக்காக
2. வங்கியில் பணியாற்றுவோருக்காக (பெயர் சொல்லி ஜெபிக்கவும்)
3. திருமண்டல சிறுவர் ஊழிய பொறுப்பாளர்களுக்காக
4. உங்கள் சபையின் சிறு பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக
5. சிறுபிள்ளைகள் ஆவியின் அபிஷேகம் பெற்று கர்த்தருக்குள் வளரவும், ஸ்திரப்படவும்



மாதிரி ஜெபம்

# சகோ. சாம் ஜெபத்துரை அவர்களின் ஆலோசனை

## மூன்றாம் வார தியானம்

சகோ. சாம் ஜெபத்துரை அவர்களின் புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருக்கும் போது எல்லோருக்காகவும் ஜெபிக்க ஒரு சுலபமான முறை ஒன்றை எழுதியிருந்தார். அதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஜெபிக்க ஆரம்பிக்குமுன் உங்கள் விரல்களைப் பார்த்துக் கொள்ளுங்கள். முதலில் பெருவிரல். அது உங்களுக்கு அருகில் இருக்கிறது. அப்படியே உங்களுக்கு அருகில் இருக்கும் ஒவ்வொரு இனத்தவர்களுக் காகவும், நெருங்கிய நண்பர்களுக் காகவும் ஜெபியுங்கள்.

இரண்டாவது இருப்பது ஆள்காட்டிவிரல் உங்களைச் சுட்டிக் காட்டி பிரசங்கிக்கும் ஊழியர்களுக் காக, ஆசிரியர் போதகர்களுக் காகவும் ஜெபியுங்கள். மூன்றாவது உயர்ந்த நீளமான நடுவிரல். இந்த நடுவிரலைக் காணும் போது உங்களை விட மேம்பட்ட மேலதிகாரி, ஆளுநர்கள், மந்திரிகள் போன்றவர்களுக்காக ஜெபியுங்கள்.

நான்காவதாக பெலவீனமான விரலைக் காணும் போது வியாதியஸ்தர், ஏழைகள், தரித்திரர் துன்பத்தில் இருப்போர் இவர்களுக்காக ஜெபியுங்கள்.

கடைசியாக இருப்பது சுண்டு விரல். இது உங்களையும் உங்கள் தேவைகளையும் ஞாபகப்படுத்தும் அருமையான ஜெபமுறை. ஞாபகத்தில் வைக்கவும் சிரமம் இல்லை. எளிமையான ஜெபமுறை எல்லாரும் பின்பற்றக்கூடிய வழிமுறை. பிறருக்காக ஜெபிக்க விரும்பும் யாவரும் இம்முறையைப் பின்பற்றலாம்.

இந்த முறையை நீங்கள் பின்பற்ற எளிதாய் இருக்கும்படி ஒவ்வொரு விரலுக்கான ஜெபக்குறிப்பை உங்களுக்காக எழுத விரும்புகிறேன்.

### பெருவிரல்

இருதயத்துக்கு நெருக்கமானவர்களுக்காக, நண்பர்களுக்காக, உடன் பிறந்தவர்களுக்காக,

**சிறு பிராய நண்பர்கள்**

**கல்லூரி நண்பர்கள்**

**குடும்ப நண்பர்கள்**

உடன் பிறந்தோரின் குடும்பங்களில் உள்ளவர்கள் இவர்களின் பேரை எல்லாம் சொல்லி ஜெபியுங்கள். அவர்களின் தேவை என்ன என்பதை அறிந்தால் அவைகளுக்காகவும் ஜெபியுங்கள். வாழ்த்தி ஆசீர்வதித்து ஜெபியுங்கள்.

## ஆள்காட்டிவிரல்

தெரிந்த ஊழியங்கள், சுட்டிக் காட்டி பிரசங்கி ஊழியர்கள் பெயர் சொல்லி ஜெபியுங்கள். தெரிந்த போதகர்களின் பெயர் சொல்லி அவர்களது ஊழியத்துக்காக, குடும்பத்துக்காக ஜெபியுங்கள்.

உங்களுக்குக் கற்றுக் கொடுத்த ஆசிரியர்களின் பெயர் சொல்லி இரட்சிக்கப்படாதோர் இருப்பின் அவர்களின் இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.

## நடுவிரல்

✷ **பிரதம மந்திரி**

✷ **முதல் மந்திரி**

✷ **மத்திய மாநில மந்திரிகள்**

✷ **உங்கள் மாவட்ட கலெக்டர்**

✷ **உங்கள் MLA மற்றும் மேயர்**

உங்கள் உயர் அதிகாரிகள் இவர்களுக்காக ஜெபியுங்கள்.

## பெலவீனமான விரல்

☆ **உங்களுக்குத் தெரிந்த பெலவீனமானோரின் பெயர் சொல்லி ஜெபிக்கவும்.**

☆ **வியாதியஸ்தர்களுக்காக**

☆ **அருகில் இருக்கும் ஏழைகள், அனாதைகள், ஆதரவற்றோர் இவர்களுக்காக ஜெபியுங்கள். பொதுவாக ஜெபிப்பதைக் காட்டிலும் பெயர் சொல்லி ஜெபிப்பது நல்லது.**

## சுண்டு விரல்

உங்களின் தனிப்பட்ட தேவைகளுக்காக, உங்களின் ஆசீர்வாதத்திற்காக ஜெபியுங்கள். இதுவரை ஜெபிக்கத் தெரியாமல் தட்டிக் கழித்தவர்கள் இம்முறையைப் பின்பற்றி ஜெபித்துப் பாருங்கள். நேரம் போவதே தெரியாது. கிறிஸ்துவுடனான ஐக்கியமும் பெலப்படும். கர்த்தர் நாமம் மகிமைப்படுவதாக.

## ஜெபக்குறிப்புகள்

**தேசத்திற்காக ஜெபிப்போம்!**

1. தமிழகத்தில் நல்லாட்சி நிலவ
2. தமிழக முதலமைச்சர், துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கு
3. தமிழ் நாட்டில் உள்ள திருச்சபைகளின், பாதுகாப்பிற்காக
4. தமிழகத்தின் அரசியல் கட்சி தலைவர்களுக்காக

   (பெயர் சொல்லி ஜெபிக்கவும்)

மாதிரி ஜெபம்

# வசன ஜெபம்

## நான்காம் வார தியானம்

Proclaim (கூறி அறிவிப்பது) என்ற ஆங்கில வார்த்தையானது இலத்தீன் வார்த்தையிலிருந்து வந்ததாகும். அதற்கு சத்தமிட்டுக் கூப்பிடு என்று பொருள். புதிய ஏற்பாட்டில் இதனை சார்ந்து வரும் வேறு ஒரு வார்த்தை அறிக்கை செய்தல் என்பதாகும். அறிக்கை செய்தல் என்றால் 'அதையே திரும்பச்சொல்' என்று பொருள். தேவன் தம்முடைய வார்த்தையில் ஏற்கனவே என்ன கூறியுள்ளாரோ அதை நமது வாயின் மூலம் கூறுவதே அறிக்கை செய்தலாகும்.

கூறி அறிவிப்பது என்பது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஏற்றார்போல் வசனத்தை பிரயோகிப்பதாகும். அதற்கு நம்பிக்கையும் விசுவாசமும் வேண்டும். நீங்கள் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்துக் கூறும் போது தேவன் தாமே அந்த வார்த்தையை அவரது ஆவியின் வல்லமையால் அறிக்கையிடுவது போன்று அபரிமிதமான ஆற்றல் வெளிப்படுவதைக் காணலாம்.

தேவனுடைய ஆவியானவர் தேவனுடைய வார்த்தையை உங்களுடைய வாயின் மூலமாக பேசுவாரென்றால் தேவன் சொல்லினால் உண்டாக்கும் போது வெளிப்பட்ட வல்லமைக்கு ஒப்பான வல்லமையுடையதாய் உங்கள் வாயின் வார்த்தைகளும் இருக்கும்.

நீங்கள் அறிக்கையிடும் வசனங்களை உங்களுடைய சொந்த அனுபவமாக்கிக் கொள்வது நல்லது. எனவே எங்கெல்லாம் வேதத்தில் "நீ" என்று கூறப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் 'நான்' என்று கூறிப் பழக வேண்டும். இப்படிச் செய்தால் 'இது எனக்குரியது' என்று நீங்கள் அந்த ஆசீர்வாதத்தை உங்களுக்குரியதாக்கி அறிக்கையிடுகிறீர்கள்.

வேதகதாபாத்திரங்களின் வார்த்தைகள், ஜெபங்கள், கர்த்தரைப் போற்றிப் பாடிய வசனங்கள் எல்லாம் நாமும் அறிக்கை செய்யும் போது அவர்களோடு இணைந்து விடுகிறோம்.

சில வசனங்களை வாசித்து அறிக்கை செய்யும் போது அவை ஜெபங்களாய், துதிபாடலாய், விசுவாச அறிக்கையாய் அமைந்து விடும். உதாரணத்திற்கு சங்கீதம் 91 ஐ எடுத்துக் கொள்ளுங்கள். சங்கீதக்காரனின் அறிக்கை இது. இந்த சங்கீதத்தை உங்களுக்குரியதாக்கி வாசிக்கும் போது அற்புதமான ஜெபம்+விசுவாச அறிக்கையாகிறது.

''உன்னதமானவரின் மறைவிலிருக்கிற நான் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவேன்" என்று அறிக்கை செய்ய வேண்டும்.

''உன்னதமானவரின் மறைவிலிருக்கிற நான் சர்வ

வல்லவருடைய நிழலில் தங்குவேன்" என்று அறிக்கை செய்ய வேண்டும்.

தானியேல் கர்த்தரை ஸ்தோத்திரித்து ஜெபித்த அற்புதமான ஜெபம் தானியேல் 2:20-23ல் உள்ளது. இந்த ஸ்தோத்திர ஜெபம் வசன ஜெபமாகும்.

I சாமு2ம் அதிகாரத்தில் அன்னாள் கர்த்தரைத் துதித்த துதி வார்த்தைகள் இடம் பெற்றுள்ளன. கர்த்தரைத் துதிக்க இந்த வசனங்களை அறிக்கை செய்யலாம்.

II சாமுவேல் 22ல் தாவீது கர்த்தரைக் குறித்து பாடின வார்த்தைகள் வந்துள்ளன. இதை 18ம் சங்கீதத்திலும் வாசிக்கலாம். இவைகளை அறிக்கை செய்ய செய்ய விசுவாசம் அதிகரிப்பதையும், தைரியம் உண்டாவதையும் அனபவிக்க முடியும்.

சங் 121 – பாதுகாப்பிற்கானது

சங் 46 – கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்ற உற்சாகம் தரக் கூடியது

சங் 128 – குடும்ப ஆசீர்வாதத்திற்கானது

சங் 34 – அனுதின வாழ்வுக்கானது

அதுமட்டுமல்ல எபேசி 6ல் 11ம் வசன முதல் 17ம் வசனம் வரை சர்வாயுத வர்க்கம் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த வசனங்களை உங்களுக்குரியதாக்கி அறிக்கை செய்யும் (ஜெபிக்கும்) ஒவ்வொரு நேரமும் சர்வாயுத வர்க்கத்தை நீங்கள் தரித்துக் கொள்கிறீர்கள் என்பது அடையாளமாகும்.

உங்களுடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட மோசமான நிலையாக இருந்தாலும் இப்படிப்பட்ட சூழலில் தேவனுடைய வார்த்தை கிரியை செய்வதை, தேவனிடத்திலிருந்து அதிகாரம் வெளிப்படுவதை அனுபவிப்பீர்கள். இந்த வசன ஜெபம் விசுவாச ஜெபமாகும். அது ஒரு போதும் தள்ளப்படுவதில்லை. இதற்கு உதவியாக எங்களிடம் கிருபை வெளியீடான 2 புத்தகங்கள் உள்ளன.

1. நாளுக்கொரு ஜெபம்
2. ஆவியின் பட்டயம்

இந்த புத்தகங்கள் வசன ஜெபம் செய்வதற்கு சிறந்த கையேடாகும். எங்களோடு தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுங்கள். தேவனுக்கே மகிமை!

## குறிப்பிட்ட ஊழியத்திற்காய் ஜெபிப்போம்

**ஜெபக் குறிப்புகள்**

**பாளையங்கோட்டையை தலைமையிடமாக வைத்து ''மிஸ்பா' ஊழியங்களைச் செய்து வரும் சகோ. குருசிங் அவர்களின் ஊழியத்திற்காக.**

1. சகோதரனின் குடும்ப ஆசீர்வாதத்திற்காக மற்றும் சரீர ஆரோக்கியத்திற்காக
2. நூற்றுக்கும் மேற்பட்ட இவரின் புத்தகங்களுக்காக
3. தரங்கம்பாடியில் செய்து வரும் சபை ஊழியங்களுக்காக
4. மிஷனெரிப் பணியாளர்களுக்காக
5. எழுத்து ஊழியங்கள் மற்றும் நற்செய்திக் கூட்டங்களில் தேவன் இவரை வல்லமையாய் பயன்படுத்த

# கிருபை வேதாகம புதையல் - 4



## I. இரட்டைக் கேள்விகள் இருப்பிடத்துடன் பதில் தருக

| | | | |
|---|---|---|---|
| 1. | a. | நிம்ரோத் | ஆதி 10:8 |
| | b. | யெப்தா | நியாதி 11:1 |
| 2. | a. | | உன் 6:8 |
| | b. | | நாகூம் 3:3 |
| 3. | a. | எக்லோன் | நியா 3:17 |
| | b. | ஏலி | 1 சாமு 4:18 |
| 4. | a. | அப்போஸ்தலனாகிய பவுல் | கலா 4:16 |
| | b. | தேவனாகிய கர்த்தர் | யாத் 23:22 |
| 5. | a. | தசமபாகம் எல்லாம் | லேவி 27:30 |
| | b. | இரட்சணியமும், மகிமையும், கனமும், வல்லமையும். வெளி 19:1. | |

## II. சரியா? தவறா?

| | | இருப்பிடம் |
|---|---|---|
| 1. | தவறு | 1 சாமு 16:18 |
| 2. | தவறு | 2 இராஜா 6:18 |
| 3. | சரி | 1 இராஜா 4:32 |
| 4. | தவறு | ஆகாஸ் 2:2 |
| 5. | தவறு | அப்போ 6:10 |

## III. யார் இவர்கள்?

| | | இருப்பிடம் |
|---|---|---|
| 1. | பார்வோனின் மனைவி ராஜஸ்திரீ | 1 இராஜா 11:19,20 |
| 2. | எகிப்தின் இராஜா | 1 இராஜா 14:25 |
| 3. | பிரதான ஆசிரியர் | அப்போ 19:14 |
| 4. | தீவின் முதலாளி | அப்போ 28:7 |
| 5. | ஆசாரியன் | நெகே 13:13 |

## IV. விடை என்ன?

| | | இருப்பிடம் |
|---|---|---|
| 1. | ஞானம், மூடனுக்கு | நீதி 24:7 |
| 2. | இஸ்ரவேலர், கர்த்தருக்கு | எசேக் 22:18 |
| 3. | சாலமோன் நாட்கள் | I இராஜா 10:21,2 நாளா 9:20 |
| 4. | இஸ்ரவேலர்கள் | எசேக் 22:18 |
| 5. | பிகெமோத்தின் | யோபு 40:17 |

## V. கண்டுபிடியுங்களேன் !

| | | |
|---|---|---|
| 1. | ஆவிலா | ஆதி 2:12 |
| 2. | மண்ணிலிருந்து | யோபு 28:2 |
| 3. | யோசபாத்தின் பள்ளத்தாக்கு | யோவே 3:12 |
| 4. | நினிவே | செப் 2:13,15 |
| 5. | வேசித்தனமும், திராட்சரசமும் | ஓசியா 4:11 |
| 6. | மரணம் உண்டான பின் | எபி 9:17 |
| 7. | ஞானிகளின் | பிர 12:11 |
| 8. | யாக்கோபு, யோசேப்பு | ஆதி 30:2,50:19 |
| 9. | பேலிக்ஸ் | அப்போ 24:24 |
| 10. | மரணம் | 1 கொரி 15:26 |
| 11. | யோனதாப் | 2 சாமு 13:3 |
| 12. | யோபு | யோபு 19:6 |
| 13. | கள்ளப்போதகர்கள் | 2 தீமோ 2:16 |
| 14. | நீதிமான் | நீதி 9:9 |
| 15. | எலிகூ | யோபு 36:4 |

## VI. எங்கே வாசிக்கிறோம்?

1. உபா 28:40
2. ஏசா 2:18
3. சங் 146:4
4. நாகூம் 2:6
5. ஆதி 33:13
6. 2 பேதுரு 3:12
7. ஏசா 19:10
8. யோபு 18:7
9. எசேக் 15:4
10. 2 கொரி 3:16

## VII. இது என்ன?

| | | இருப்பிடம் |
|---|---|---|
| 1. | பட்டணம் | அப் 28:12 |
| 2. | ஊர் | ஏசா 16:7 |
| 3. | தேசம் | ரோமர் 15:24 |
| 4. | தாவீதின் நகரம் | 2 சாமு 5:7 |
| 5. | பட்டணம் | ஆதி 36:39 |

## VIII. யார் ? கண்டுபிடிக்கவும் இருப்பிடமும் எழுதுக

1. ஆதி 4:17, ஏனோக்கு
2. ஏசா 44:9 விக்கிரகங்களை உருவாக்குவோர்
3. எசே 21:29, பட்டயம், வெட்டவும் சங்கரிக்கவும்
4. எரே 28:6 கர்த்தர் அப்படியே செய்வாராக.
5. செப்ப 1:11, வர்த்தகரெல்லாரும்,காசுக்காரர் யாவரும்.
6. சகரியா 9:6, அஸ்தோத்தில்
7. 1 சாமு 24:16,17–19, தாவீது
8. ஆதி 38:24–26, தாமார்
9. லூக்கா 16:1–8 அநீதியுள்ள உக்கிராணக்காரன்
10. 2 சாமு 14:25, அப்சலோம்
11. ஒசியா 6:8, கீலேயாத்
12. யோபு 25:6, மனிதன், மனுபுத்திரன்
13. சங் 137:8, பாபிலோனின் குமாரத்தி
14. நீதி 12:19, பொய்நாவு
15. வெளி 14:11, மிருக்கத்தையும் அதின் சொருபத்தையும் வணங்குகிறவர்களுக்கும்,
16. தானி 2:31, பெரிய சிலையின் ரூபம்
17. யாக் 2:25, ராகாப்
18. எரேமி 52:1, லீப்னா ஊரானாகிய எரேமியா
19. 2 சாமு 3:5, தாவீது
20. நியாதி 11:40, யெப்தாவின் குமாரத்தியைக் குறித்து
21. தானி 5:18–21, நேபுகாத்நேச்சார் உடைய இருதயம்
22. யோபு 29:1, 30:9, யோபு
23. வெளி 18:8, வாதைகள்
24. நீதி 31:1,2, லேமுவேல்
25. யோபு 11:20, துன்மார்க்கருடைய நம்பிக்கை

## IX. கோடிட்ட இடத்தை நிரப்பும்

1. சமுத்திரத்து மச்சங்களும், அதிகாரியில்லாத ஊர்வனவற்றிற்கும் ஆபகூக் 14
2. வெண்கலமும், இரும்பும் உபா8:23
3. அப்பொழுது கடலின், நதியும் ஏசாயா 9:5
4. நொறுங்கவே நொறுங்கும், முறியவே முறியும், அசையவே அசையும். ஏசா 24:19
5. நீதிப்பிரமாணத்தைத், நீதிப்பிரமாணத்தை ரோம 9:31

## X. வார்த்தையை சரிப்படுத்தி வசனத்தை கண்டுபிடிக்கவும்

1. காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று, மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார். மாற்கு 1:15
2. மனந்திரும்புங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள் சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். எசே 18:32.
3. நீதியினால் ஸ்திரப்பட்டிருப்பாய், கொடுமைக்குத் தூரமாவாய் பயமில்லாதிருப்பாய் திகிலுக்குத் தூரமாவாய் அது உன்னை அணுகுவதில்லை. ஏசா 54:14.
4. இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன் மரணபரியந்தம் நம்மை நடத்துவார். சங் 48:14.
5. அந்நியர் முனை விழுந்து போய் தங்கள் அரண்களிலிருந்து தத்தளிப்பாய் புறப்படுகிறார்கள். சங் 18:45.

## XI. விடுகதையை விடுவிக்கவும் இருப்பிடமும் தருக

1. ஈராம், 1 இராஜா 7:13,14
2. யோபு, யோபு 30:29
3. உடன்படிக்கை பெட்டி, பத்துக்கற்பனைகள். உபா 10:1–5
4. புறா ஆதி 8:8 to 11,20
5. நோவா ஆதி 6:13–22

## XII. விடை என்ன? இருப்பிடம் எங்கே?

1. சவுல், மாடு 1 சாமு 11:15 (தாவீது, ஆடு)
2. லேவி 7:37
3. தாய்– ஏத்தித்தி, மகள்– எருசலேம். எசே 16:44,2,3
4. பெலம்–தாவீது, பலவீனம்–சவுல், 2 சாமு 3:1
5. பெயர் புகழ் பெற்று–நீதிமான், பெயர் அழிந்து போகும்–துன்மார்க்கன் நீதி 10:7

## XIII. வேதாகம கணக்கு

மாடுகள் 72000 (எண் 31:38)
அப்பம் போஷிக்கப்பட்டோர் 100 (ராஜா 4:42,43)
தாவீதின் மனைவிகள் 8–2 சாமு 3:25
தாவீதின் குமாரர் 19 –1 நாளா 3:1 –8
ஆவியின் கனிகள் 9 கலா 5:22,23
ஏப்பேரின் பேத்திகள் –5 எண் 26:33
போதுமென்று சொல்லாதவை –4 நீதி 30:15
தேவையானது – 1
[(72000)/ (100*8)] +
(19-9) = 5+4+1
90+10 = 10
100 = 10
இரண்டும் சமமில்லை 100=10

## பரிசு பெற்றவர்கள்

### முதல் பரிசு 200 மதிப்பெண்

1. Sis. A. மரகதமணி மதுரை

### இரண்டாம் பரிசு 198 மதிப்பெண்

1. Sis. கீதா சார்லஸ் சேலம்

### மூன்றாம் பரிசு 197.5 மதிப்பெண்

1. Sis. கலைச்செல்வி கோவை

### நான்காம் பரிசு 197 மதிப்பெண்

1. Sis. ரூபி ஜெய்சிங் சென்னை
2. Sis. சந்திரா ராஜாபாளையம்
3. Sis. கிருபா ஜெபஸ்டின் உடன்குடி

### ஐந்தாம் பரிசு 196 மதிப்பெண்

1. Sis. ஜபிளாஸ் தானியேல் மதுரை
2. Sis. சுசிலாஜான் பெரியகுளம்
3. Sis. ரூபிஜெபராஜ் மதுரை

### ஆறாம் பரிசு 195 மதிப்பெண்

1. Sis. சுஜாதா லிதியாள் உடன்குடி

### ஏழாம் பரிசு 194.5 மதிப்பெண்

1. Sis. அன்னபாக்கியம் ஜெயகுமார் மதுரை

### எட்டாம் பரிசு 194 மதிப்பெண்

1. Sis. A. சுமதி கோவை

### ஒன்பதாம் பரிசு 193.5 மதிப்பெண்

1. Sis. ஜெயசீலி காரைக்குடி
2. Sis. புஷ்பராணி சிங்காரபாண்டி உடன்குடி
3. Sis. ஜான்சி சந்தியா மருதகுளம்
4. Sis. ரஜீலா மார்ட்டின் உடன்குடி
5. Sis. மாலா வில்சன் பெரியகுளம்
6. Sis. சுசிலாராஜபாண்டியன் சத்தி
7. Sis. A.V. ஜிரோஜினா மதுரை

### 10ம் பரிசு 193 மதிப்பெண்

1. Sis. வளர்மதி நேவிஷ் கோவை
2. Sis. கிரேஸ் செல்லம்மாள் மதுரை
3. Sis. இவாஞ்சலின் ராஜாசிங் மதுரை
4. Sis. லின்சி அகஸ்டா உடன்குடி
5. Sis. கிரேஸிலெட் ஜெயபால் திருச்சி
6. Sis. ஜெபகுட்டிமோசஸ் மருதகுளம்
7. Sis. மேரி சீனித்தாய் பாண்டியன் நாகமலைபுதுக்கோட்டை

### 11ம் பரிசு 192.5 மதிப்பெண்

1. Sis. ஜெயமாலா மதுரை

### 12ம் பரிசு 192 மதிப்பெண்

1. Sis. ஜெபத்தாய் விருதுநகர்
2. Sis. பொன்ராணி அன்புநாதன்பெரியகுளம்
3. Sis. தாயானா மேரி மதுரை
4. Sis. ஜான்சி நாசரேத்
5. Sis. நவரத்தினம் ஞானராஜ் நாசரேத்

### 13ம் பரிசு 191 மதிப்பெண்

1. Sis. ரத்னாபாய் பிரசாத் மதுரை
2. Sis. சுதா கோவை
3. Sis. ஜெயந்தி பெக்சன் கேரளா

**181 முதல் 190 வரை மதிப்பெண் பெற்றவர்களுக்கு ஆறுதல் பரிசு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

# பிரியமானவனே!...

## நீ சுகமாயிருக்கும்படி



### கவலையோடு சாப்பிடாதீங்க!

சாப்பாட்டுக்கு முன் சூப் அருந்துங்கள். அது உங்கள் வயிற்றை நிரப்பும். அதிகம் சாப்பிடுவதைத்தடுக்கும்.

சாப்பிடும் போது சாப்பாட்டைத் தவிர வேறு சிந்தனைகள் வேண்டாம். உணவைப் பற்றிச் சிந்திப்பது உமிழ்நீர்சுரப்பை அதிகரிக்கும்.

சாப்பிடுவதற்கு முன்னரும் பின்னரும் நிறைய தண்ணீர் குடியுங்கள். இடையில் வேண்டாம்.

சாப்பிட்ட உடனே தூங்கச் செல்ல வேண்டாம். தாமதமாகச் சாப்பிடுவதும் செரிமானக் கோளாறுகளை ஏற்படுத்தும். நெஞ்செரிச்சலை உருவாக்கும்.

இரவில் செரிமானத்துக்கு எளிதான உணவுகளை மட்டுமே உண்ணுங்கள். மாவுச்சத்தும், மசாலாக்களும், எண்ணெயும் நிறைந்த உணவுகள் செரிமானத்தைக் கடினமாக்குவதுடன் தூக்கத்தையும் கெடுக்கும்.

ஒவ்வொரு வேளையிலும் நார்ச்சத்துள்ள உணவுகள் அவசியம் இடம்பெற வேண்டும். அவை மலச்சிக்கலைத்தவிர்க்கும்.

சாப்பாட்டுக்கு அரை மணி நேரத்துக்கு முன்னதாக கிரீன் டீ அல்லது பால் சேர்க்காத டீ குடிப்பது உங்கள் வயிற்றை செரிமானத்துக்குத் தயார்ப்படுத்தும்.

உணவில் நிறைய புரதம் இருக்கும்படிப் பார்த்துக் கொள்ளுங்கள். அது சீக்கிரமே பசி உணர்வு எழுவதைத் தடுக்கும்.

எப்போதும் சூடான உணவுகளையே சாப்பிடவும், உணவின் சூடு உங்கள் வயிற்றுத் தசைகளைத்தளர்த்தும்.

மூன்று வேளை வயிறு முட்டச் சாப்பிடுவதற்கு பதில் ஆறு வேளை குறைந்த அளவில் சாப்பிடுவது உங்கள் ரத்தச் சர்க்கரையின் அளவைக் கட்டுக்குள்வைத்திருக்கும்.

சாப்பிடும்போது கவலைகளை ஓரங்கட்டிவிடுங்கள். கவலையாக இருக்கும் போது உங்களையும் அறியாமல் நீங்கள் அதிகம்சாப்பிடுவீர்கள்.



# குட்டீஸ் கார்னர்

ஒரு முறை சாது சுந்தர்சிங்கை திபெத்திலுள்ள ஒரு கிராமத்தில் விரட்டியடித்தார்கள். இயேசுவை பிரசங்கித்ததினால் அந்த ஊர் மக்களுக்கு பயங்கரமான கோபம் வந்து விட்டது. சரீரமெல்லாம் காயங்களோடு வெளியேறிய அவர் இரவிலே தூங்குவதற்காக ஒரு குகைக்குள் போனார். ஆனால் அந்தோ தூரத்திலிருந்து நூற்றுக்கணக்கான கிராம மக்கள் கைகளிலே பயங்கரமான ஆயுதங்களோடு, தடிகளோடு, கத்திகளோடு அந்த குகையை நோக்கி வருகிறதைக் கண்டார்.

எந்த விதத்திலும் தப்பிக்க வழி இல்லை என்று அறிந்த அவர் அந்த குகைக்குள்ளே முழங்கால் ஊன்றி ஊக்கமாக ஜெபித்தார். அரை மணி நேர ஜெபத்துக்குப் பின்பு கண்களைத் திறந்த போது அவர்கள் எல்லாரும் வந்த வழியே திரும்பிச் செல்லுகிறதை கண்டார். பயம் நீங்கின அவர் குகையிலே தங்கி கர்த்தரை சந்தோஷமாய் துதித்தார்.

ஆனால் அடுத்த நாள் காலை அவர் எழும்பிய போது இன்னும் அதிகமான கூட்டம் மீண்டும் அந்த குகையை நோக்கி வருகிறதைக் கண்டார். முன்பு இருந்த கூட்டத்தை விட மூன்று நான்கு மடங்கு அதிகமாய் இருந்தது. அவர்கள் குகையண்டை வந்தார்கள். சாது சுந்தர்சிங்கை பார்த்து ஐயா நாங்கள் நேற்று உம்மை கொன்று போட பயங்கரமான ஆயுதங்களோடு வந்தோம். ஆனால் உங்களுடைய குகையைச் சுற்றிலும் நின்ற அந்த மகத்தான புருஷர்கள் யார்? அவர்களிலிருந்து வீசின ஒளி என்ன ஒளி அந்த புருஷர் எந்த தேசத்தைச் சார்ந்தவர்கள் என்று கேட்டார்கள்.

சாது சுந்தர்சிங்குக்கு சுவிசேஷத்தை அறிவிக்க அது ஒரு நல்லத் தருணமாக அமைந்தது. இயேசுகிறிஸ்து எவ்வளவு பெரியவர். அவர் எப்படி எல்லாத் தீங்கிலிருந்தும் தம்முடைய பிள்ளைகளைப் பாதுகாக்கிறவர்? அவரை ஏற்றுக் கொள்ளும் போது கிடைக்கிற ஆசீர்வாதங்கள் என்ன என்பதை எல்லாம் அவர் விளக்கிச் சொன்ன போது அந்த கிராம மக்கள் தங்களை சுவிசேஷத்திற்கு அர்ப்பணித்தார்கள்.

**கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.** சங் 34:7.

ஒரே தூதன் போதும். ஒரே தூதனே சுற்றிலும் சூழந்து பாதுகாக்கிறார் எனில் பிரமிப்பாயிருக்கிறது தானே! அல்லேலூயா!

## "இசாவா"

கேய்ரோ தேசத்திலே ஒரு குப்பை பொறுக்குகிற சிறுவன் தெருத் தெருவாய் சென்று குப்பை எடுப்பான். அப்படியொரு நாள் செல்லும் போது ஒரு வீட்டின் முன்பு உள்ள குப்பைத் தொட்டியில் ஒரு அழகான சின்ன பாக்ஸ் இருப்பதைப் பார்த்தான். இதை யாரோ தவறவிட்டு இருக்கிறார்கள். நிச்சயமாக குப்பைத் தொட்டியில் இருக்க வேண்டிய பொருள் அல்லை என்று நினைத்து அதை எடுத்துப் பார்க்கும் போது ஒரு அழகான விலையுயர்ந்த Watch இருந்தது.

இவன் இதைப் பார்த்தவுடன் இந்தப்பொருளை தவற விட்டவர்களிடம் இதை சேர்த்துவிட வேண்டும் என்று நினைத்து அவன் வீடு வீடாக சென்று கதவை தட்டி இது உங்களுடையதா? என்று கேட்டான். ஒரு சிலர் அவனுடைய அழுக்கான தோற்றத்தைப் பார்த்து துரத்தி விட்டனர். அப்படியே அவன் சில வீடுகளைத் தட்டி கேட்டுக் கொண்டே வந்தான். ஒரு வீட்டின் கதவைத் தட்டும் போது கதவைத் திறந்த வீட்டின் உரிமையாளர் கையில் அந்த சிறுவன் வைத்திருக்கிற டப்பாவைப் பார்த்தவுடன் அவர் முகமெல்லாம் மலர்ந்தது.

ஐயா இந்த பாக்ஸ் உங்களுடையதா இந்த குப்பைத் தொட்டியில் நான் எடுத்தேன் என்றான் சிறுவன். கொடுப்பா, இதை தொலைத்து விட்டு நாங்கள் தேடிக் கொண்டிருக்கிறோம். தம்பி நீ உள்ளே இருப்பதை பார்த்தாயா? என்று கேட்டார்.

சிறுவன் ஆம் விலையுயர்ந்த Watch இருக்கிறது என்றான். உடனே அவர் நீ இந்த Watch-ஐ எங்கேயாவது விற்று நீ சந்தோஷமாய் இருந்து இருக்கலாமே என்றார். உடனே சிறுவன் நான் ஒரு இசாவா என்றானாம்.

'இசாவா'' என்றால் ''நான் இயேசுவுக்கு சொந்தமானவன்'' என்று அர்த்தமாம். இயேசுவுக்கு சொந்தமான நான் பிறர் பொருளை இச்சிக்க மாட்டேன். அதனால் வரும் சந்தோஷம் எனக்கு தேவை இல்லை. நான் இயேசுவின் பிள்ளை என்றானாம். நாம் ஒவ்வொருவரும் இசாவா இதை வாசிக்கிற குட்டித் தம்பி, தங்கை நீ ஒரு 'இசாவா'! ஆமென்.

# அழகாய் நிற்கும் யார் இவர்கள்...

1981 ம் ஆண்டு மே மாதத்தில் ஆண்டவராகிய இயேசு சகோதரருக்கு தோன்றி, ஆயிரக்கணக்கான இந்திய இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை பெறுவதற்கான கல்வியை அளிக்கக் கூடிய ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை நிறுவும்படி கட்டளை கொடுத்தார். என்றாலும், நான் எல்லாப் பக்கத்திலும் நெருக்கப்பட்டதனால் மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக சகோதரால் எந்த முயற்சியும் எடுக்க முடியவில்லை.

அந்த கால கட்டத்தில்தான் 1984 ல் ஊழியம் செய்வதற்காக சுவிட்சர்லாந்து நாட்டிற்கு செல்ல வேண்டியிருந்தது போகும் வழியில் சகோதரர் குடும்பத்தினருக்கு இஸ்ரவேல் தேசத்தை (The Holy Land) காண்பிக்க அழைத்துச் சென்றேன் என்றார்.

ஒரு நாள் காலை எருசலேம் நகரிலுள்ள ஹோட்டல் ஷாலோமில், சகோதரர் அறையில் அவர் தனித்திருந்து தேவனுடைய வார்த்தைகளை தியானித்துக் கொண்டிருந்தார். அச்சமயம் சூரிய ஒளி பிரகாசமாகவும், சுட்டெரிப்பதாகவும் இருந்தது. சகோதரர் அந்த அறை ஜன்னல் வழியாய் வெளியே பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று அதிலும் மிகப் பிரகாசமான வேறொரு ஒளி பரலோகத்திலிருந்து வெளிப்படுவதைக் கண்டார்.

அந்த பிரகாசமான ஒளியில், பரலோகத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும் ஒரு பெரிய சிங்காசனம் காணப்பட்டது. அங்கே கெம்பீரமான தோற்றமுடைய ஒருவர் சிங்காசனத்திலிருந்து "சர்வ வல்ல தேவனாகிய நான் இப்போது உன்னோடு பேசிக் கொண்டிருக்கிறேன்".

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை கட்டும்படி நான் உனக்கு கட்டளையிட்டிருந்தேன். ஆனால் நீ அதைப்பற்றி இதுவரையிலும் ஒன்றும் செய்யவேயில்லை என்று சொன்னார். சகோதரர் அவரைப் பார்த்து அவர் சொல்வதை கேட்டுக் கொண்டிருந்த பொழுது, உண்மையில் நடுநடுங்கிப் போனார். அதன்பிறகு அவர் அந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கு என்னென்ன காரியங்களை செய்ய வேண்டும் என்பதை படிப்படியாக எடுத்துக் கூறினார்.

அந்த பல்வேறு படிகளை அவர் விளக்கமாக கூறி முடிக்க கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் ஆனது. இவற்றைக் கவனமாக குறித்துக் கொண்ட


சகோதரர் மகன் பால் தினகரன் சகோதரர் D.G.S அறைக்குள் வந்தவுடன் அவருடன் அதை பகிர்ந்து கொண்டார். தேவனுடைய செயல் திட்டங்களை அவர்கள் இருவரும் உட்கார்ந்து அந்த படிப்படியான விளக்கங்களை ஒவ்வொன்றாக குறித்துக் கொண்டார்கள்.

தேவன் தம்முடைய இரக்கத்தினால், வெகு தெளிவாக ஒரு தரிசனத்தின் மூலம் கோயம்புத்தூருக்கு அருகில் சிறுவாணி என்ற இடத்தில் அந்த பல்கலைக் கழகத்தை ஸ்தாபிக்கும்படி வெளிப்படுத்தினார். அந்த இடத்தை பாத்திராதபடியால், சகோதரர் குழுவாக சென்று அந்த நிலப்பகுதியை பார்வையிட்டபோது மிகுந்த பரவசமடைந்தார். தேவன் சகோதரரிடம் நேரடியாக இடைப்பட்டு வழிநடத்தி வந்ததால் மட்டுமே பல்கலைக்கழகத்தை எழுப்ப முடிந்தது.


இதோ உங்களுக்காக


* மூன்று வாலிபர்கள்





* ஆராதனையும் பார்வோனும்

* வித்தியாசமானவர்கள்



இதோ

விரைவில் உங்கள் கைகளில்

❖ கலகம் பண்ணாதே

❖ சங்கீதங்களுடன் துதிப்போம்

❖ fearnot

# சிந்திப்போம்! செயல்படுவோம்!

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஜான்வெஸ்லி என்ற ஒரு தேவ மனிதர் இருந்தார். ஜான்வெஸ்லி என்பது அவர் பெயர். அந்த நாட்களில் ஜனங்கள் ஆலயத்திற்கு வருவது கூடாத காரியமாய் இருந்தது. புலம்பி அழுதார். என் ஆலயம் வெறுமையாய் இருக்கிறதே என்று அழுவாராம். அந்த ஊழியர் ஜனங்கள் ஆலயத்திற்கு வராவிட்டால் என்ன? நீ ஜனங்களை தேடி போ என்று ஆண்டவர் அவரிடம் சொன்னார். அவருடைய வாழ்க்கை உருமாற்றம் பெற்று எழுந்தார். தன் குதிரை மீது ஏறினார்.

சரித்திரம் சொல்லுகிறது 60 வருஷம் அதாவது அவரின் 23ம் வயதிலிருந்து 84-ம் வயது வரைக்கும் 2,50,000- மைல்கள் குதிரையில் மாத்திரம் பிரயாணம் செய்த ஒரு சரித்திரத்தை John Wesley -க்கு தேவன் கொடுத்தார். அது மாத்திரமல்ல ஆங்கிலத்தில் மாத்திரம் புகழ்பெற்ற John Wesley ஐரோப்பிய தேசங்களை கடந்து செல்லும் போது ப்ரெஞ்ச், ஸ்பைனிஸ், போர்ச்சுகீசியம் போன்ற மொழிகளில் பிரசங்கம் பண்ண நேரிடும். அங்குள்ள மொழிபெயர்ப்பாளர்கள் இவர் பேசுகிற வேகத்திற்கும் ஆழத்திற்கும் பேசக்கூடாதவர்களாய் திகைத்து நின்றனர்.

இதைக்கண்டு மனம் உடைந்து போன ஜான்வெஸ்லி ஆலயத்திற்கு போய் முழங்கால்படியிட்டு,"தெய்வமே இந்த மொழிப்பெயர்ப்பாளர்களால் எனக்கு பிரயோஜனம் இல்லை. எனக்கு இந்த ஞானத்தை தாரும்" என்று புலம்பி அழுத போது 10 ஐரோப்பிய மொழிகளை பேசுகிற ஆற்றலை பரிசுத்த ஆவியானவர் John Wesley-யின் உள்ளத்தில் ஊற்றினார்.

உலக முழுவதிலும் 10 மொழிகளில் பிரசங்கம் பண்ணின ஒரே சுவிசேஷகர் என்ற பெயரையும் கர்த்தர் அவருக்கு அருளி செய்தார். அது மாத்திரமல்ல 40,000 பிரசங்கங்கள் புது புது பிரசங்கம், 400 புத்தகம் என்று தேவன் அவரை கொண்டு செய்தவைகள் நிகரற்றவையாய் இருந்தது தன் மரணத் தருவாயில் இருக்கும் போது அவர் சொன்ன வார்த்தை என்ன தெரியுமா?

The More Labour ; The More I was Storng

நான் எவ்வளவு உழைத்தேனோ எவ்வளவு பாடுபட்டனோ அவ்வளவு பலசாலியாக இருந்தேன். ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன் அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை. அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய் பிரயாசப்பட்டேன். ஆகிலும் நான் அல்ல என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது. I கொரி 15:10.

இது பவுல் அப்போஸ்தலனின் வார்த்தை. இந்த வார்த்தையின் அதிக பிரயாசப்பட தேவ கிருபை பெற்றார் இந்த ஜான் வெஸ்லி.

இதை வாசிக்கும் என் அன்பு சகோதர சகோதரிகளே! மனிதர்களாகிய நாம் சிந்திப்பது போல நம் தேவனாகிய கர்த்தர் சிந்திப்பது. ஞானம், அறிவு ஆகிய பொக்கிஷங்களை உள்ளடக்கியவர். அவருக்கு விரோதமான ஞானமுமில்லை. புத்தியுமில்லை. ஆலோசனையில் ஆச்சரியமானவர். கேள்வி கேட்காமல் அவர் ஆலோசனைக்கு கீழ்ப்படிந்தால் சாதனையாளராகலாம். கேள்வி கேட்டு கீழ்ப்படிவதைக் காட்டிலும் கேள்வி எழுப்பாமல் கீழ்ப்படிவதே கர்த்தர் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்தும். இந்தக் கீழ்ப்படிதல் சிந்திக்க வைக்கிறதுதானே! செயல்பட தேவன் கிருபை செய்வாராக!

# செய்திகள்

NEWS

## பெரிய மைதானம்

உலகின் அதிக இருக்கைகளின் அடிப்படையில் பெரிய மைதானம் 'ருன்கிராடோ மே தின மைதானம்'. இது வடகொரிய தலைநகர் பியாங்யாங் நகரில், ருன்கிரா தீவில் அமைக்கப்பட்டுள்ளது. 51 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. 1989 மே1 ல் திறக்கப்பட்டது. இங்கு ஒரே நேரத்தில் 1,14,000 ரசிகர்கள் அமர்ந்து போட்டியை காணலாம். இது கால்பந்து மைதானமாக பயன்படுத்தப்படுகிறது. சில அத்லெட்டிக் போட்டிகளும் நடத்தப்படுகிறது. உலகின் இரண்டாவது பெரிய மைதானம் அமெரிக்காவில் உள்ள மிச்சிகன் இங்கு 1.10 லட்சர் பேர் அமரலாம்.

## அபூர்வமான வெள்ளை டால்பின்



டால்பின் என்றாலே கருப்பு நிறத்தில் வழவழவென இருக்கும் வேகமாக நீந்தும் என்பது தான் நினைவுக்கு வரும். ஆனால் வெள்ளை நிறத்தில் டால்பின்கள் இருப்பது உங்களுக்கு தெரியுமா? நியூசிலாந்தில் வசிக்கும் கேப்டன் பால் கீட்டங் என்பவர் பிக்டன் பகுதியில் இ-கோ டூர்ஸ்" என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார். அவர் சமீபத்தில் சுற்றுலா பயணிகளை அழைத்துக் கொண்டு படகில் சென்ற போது அபூர்வமான வெள்ளை நிற டால்பின்கள் கண்ணில் பட்டுள்ளது. உடனே, கீட்டிங்கின் மகள் அதை வீடியோ எடுத்துள்ளார். 'யூ-டியூப்'ல் வெளியாகியுள்ள இந்த வீடியோ பலரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது.

## உங்களுக்கு தெரியுமா?

website : www.graceofchrist.org

youtube : graceofchrist.org

facebookpage : jesus grace ministries



**Please like , share & subscribe**

# KIRUBAI KIDS CLASS








# ‘வித்தியாசமானவர்கள்’ புத்தக வெளியீடு








Regd. with Registrar of News Paper
for India under No. TN TAM 18892 / 2009
Postal Registration No. TN/CB/137/2019-2021

Date of Publication 01.08.2019

# மன்னிப்பு

- உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு. சங் 130:4
- எங்கள் தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு. தானி 9:10
- இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது எபி 9:22
- எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ அவன் பாக்கியவான் சங் 32:1
- தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர் சங் 32:5
- அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து சங் 103:3
- குற்றத்தை மன்னிப்பது அவனுக்கு மகிமை நீதி 19:11
- அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. கொலோ 1:14

எங்கள் முகவரி

சகோதரி. **ஷீலா விஜயகுமார்**

கிறிஸ்து இயேசுவின் கிருபை

17, R.K.N. லே-அவுட், வெங்கிட்டாபுரம், கோயம்புத்தூர் - 641 013.

செல் : 98427 22579, 99658 99555 E-mail : jesusgraceministries@gmail.com

Owned and Published by Sis. A. Sheela Packiaselvi, No. 10, R.K.N. Layout, North Street, Venkitapuram, Coimbatore - 13.
And printed at **GARUDA GRAPHICS**, 79, D.B. Road, R.S. Puram, Coimbatore - 641 002. Ph : 0422 2542555
Editor : Sis. A. Sheela Packiaselvi, Ph : 0422 2445255